# புலிகள் வாகனம் மீது கோப்பாயில் கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகளின் 'பஜ்ரோ' வாகனம் நேற்றுமுன்தினமிரவு கோப்பாய் தெற்கில் பழம் பாய் பழம் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.
கோப்பாய் தெற்கில் பழம் வீதியில் (வயல் மதவடி உச்சு
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 22 இதழ் 330
யாழ்ப்பாணம் புதன்கிழமை 06 — 01 — 1993

## யாழ்.குடாமீது இறுதித்தாக்கு:

(கொழும்பு)
யாழ். குடா நாட்டின் மீது இறுதித் தாக்குதல் விரைவில் மேற்கொள்ளும் நோக்கில் படையினர் நீண்டகாலத் திட்டமொன்றைத் தயாரித் திருப்பதாக 'ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
இது பற்றிக் கருத்துத் தெரிவித்த முன்னாள் 'சற்றடே
(4-ம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை நடத்தும் நிலையில் அரசு இப்போது இல்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் தற்போதைக்கு பாரிய இராணுவ தாக்குதல்களை மேற்கொள்ளும் நிலையில் அரசு இப்போது இல்லையென கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அடுத்துவரும் தேர்தல்களில் தமிழ்மக்களின் வாக்குகளை அதிகளவில் அரசு எதிர்பார்ப்பதால் பாரிய இராணுவ
(4-ம் பக்கம் பார்க்க)

# 'ஜனாதிபதியின் செயல் காரணமாகவே புலிகளின் தாக்குதலில் பலியாகிறோம்!'

## பலாலி இராணுவ முகாமில் படையினர் ஆவேச கோஷம்!!

(நெல்லியடி)
ஜனாதிபதியின் செயல் காரணமாகவே புலிகளின் தாக்குதலுக்கு நாம் பலியாகிவருகின்றோம். பிரச்னையைத் தீர்க்க அவர் விரும்பவில்லை. வெளிநாடுகளுக்குப் போய்வருவதும் வீட்டில் பொழுதைக் கழிப்பதுமே அவரது வேலையாகப்போய் விட்டது. பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அண்மையில் இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எதிராக ஆவேசக் கோஷம் எழுப்பினர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட திரு. வல்லிபுரம் முத்துராஜா (48 வயது மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வியாபாரி மூலையில் தற்போது வசித்து வருபவர்) ஈழநாடு நிருபருக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:
இடைக்காட்டில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற நேரடி மோதலின்போது மரணமடைந்த சுமார் 48 இராணுவத்தினரின் சடலங்களை பொலித்தீன் பைகளில் கட்டியவாறு இராணுவ ட்ரக் வண்டிகளிலிருந்து பலாலி இராணுவ முகாமில் இறக்கப் படுவதை நான் அவதானித் தேன்.

அப்படியான நாட்களில் எனது கண்களைக் கறுப்புத் துணியினால் இறுகக் கட்டிவிடுவார்கள். இச்சண்டையில்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி சம்பவம் குறித்து விசாரணை நடத்தவேண்டும்

### தமிழ் எம். பி.க்கள் ஜனாதிபதிக்கு தந்தி

(கொழும்பு)
கிளாலி கடல் பகுதியில் பொதுமக்கள் மீது கடற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடாத்தவேண்டுமென நாடாளுமன்ற தமிழ் எம். பி.க்கள் குழு ஒன்று ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசா விடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
யுத்த சூன்யப் பிரதேசமாக முன்னர் அரசினால் பிரகடனப் படுத்தப்பட்ட கிளாலிக் கடற் பகுதியில் பயணம் செய்த மக்களின் படகு மீது கடற் படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் 14 பொது
(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் 11-ம் திகதி வெகுஜனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற் கொண்டுவரும் இராணுவ அழுத்தங்கள், பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை போன்றவற்றையும் மற்றும் அத்தியாவசிய சேவைகளை புறக்கணித்து வருவதையும் வன்மையாக ஆட்சேபித்து எதிர்வரும் 11-ம்
(4-ம் பக்கம் பார்க்க)

## லலித், காமினி, பிரேமச்சந்திர

## (முதலமைச்சர் பதவிக்குப் போட்டி!

# புலிகளின் தாக்குதலில் பலியாகிறோம்!

## பலாலி இராணுவ முகாமில் படையினர் ஆவேச கோஷம்!!

(நெல்லியடி)

ஜனாதிபதியின் செயல் காரணமாகவே புலிகளின் தாக்குதலுக்கு நாம் பலியாகிவருகின்றோம். பிரச்னையைத் தீர்க்க அவர் விரும்பவில்லை. வெளிநாடுகளுக்குப் போய்வருவதும் வீட்டில் பொழுதைக் கழிப்பதுமே அவரது வேலையாகப்போய் விட்டது. பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அண்மையில் இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எதிராக ஆவேசக் கோஷம் எழுப்பினர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட திரு. வல்லிபுரம் முத்துராஜா [48 வயது மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வியாபாரி மூலையில் தற்போது வசித்து வருபவர்] ஈழநாடு நிருபருக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்காட்டில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற நேரடி மோதலின் போது மரணமடைந்த சுமார் 48 இராணுவத்தினரின் சடலங்களை பொலித்தீன் பைகளில் கட்டியவாறு இராணுவ ட்ரக் வண்டிகளிலிருந்து பலாலி இராணுவ முகாமில் இறக்கப் படுவதை நான் அவதானித்தேன்.

அப்படியான நாட்களில் எனது கண்களைக் கறுப்புத் துணியினால் இறுகக் கட்டிவிடுவார்கள். இச்சண்டையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி சம்பவம் குறித்து விசாரணை நடத்தவேண்டும்

### தமிழ் எம். பி.க்கள் ஜனாதிபதிக்கு தந்தி

(கொழும்பு)

கிளாலி கடல் பகுதியில் பொதுமக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடாத்தவேண்டுமென நாடாளுமன்ற தமிழ் எம். பி.க்கள் குழு ஒன்று ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்த சூனியப் பிரதேசமாக முன்னர் அரசினால் பிரகடனப் படுத்தப்பட்ட கிளாலிக் கடற்பகுதியில் பயணம் செய்த மக்களின் படகு மீது கடற்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் 14 பொது

(4-ம் பக்கம் பார்க்க)

## லலித், காமினி, பிரேமச்சந்திர முதலமைச்சர் பதவிக்குப் போட்டி!

(கொழும்பு)

இந்த வருடம் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா, ஜீ. எம். பிரேமச்சந்திரா ஆகியோர் தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்களுமான திருவாளர்கள் கட்சியின் சார்பில் முக்கிய வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளனர்.

இவர்கள் மூவரும் முதலமைச்சர் பதவியை இலக்காக வைத்தே போட்டியிடவுள்ளனர்.

(4-ம்பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை மீளப்பெறுமாறு றெனி அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசியல்வாதிகளிடமும், ஏனையோரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை மீளப்பெறுமாறு முன்னாள் நிதியமைச்சர் திரு. றெனி டி மெல அரசிடம் கோரியுள்ளார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அரசு தனது அரசியல்வாதிகளிடமும், ஏனையோரிடமும் ஒப்படைத்துள்ள ஆயுதங்களை திரும்பப்பெற வேண்டும்.

ஆயுதங்களிலும், வன்முறைகளிலும் எனக்கு நம்பிக்கையில்லையென்றும் கூறினார்.

கடந்த வாரம் இவருக்கு ஆதரவான கூட்டத்தில் ஐ. தே. க. களுத்துறை எம். பி.யின் ஆதரவாளர்கள் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## படையினர் வெளியேற்றம்

(திருமலை)

திருமலையில் படையினர் முகாமிட்டிருந்த ஏழு தீவுகள் ஹோட்டலிலிருந்து கடந்த வாரம் படையினர் வெளியேறியுள்ளனர்.

தற்போது இந்த ஹோட்டல் இதன் உரிமையாளரான அமைச்சர் காமினி லொக்குகேயின் குடும்பத்தவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது (சி)

## இலங்கைப் பிரச்னையில் 'கொமன்வெல்த்' தலையிடுமா?

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தங்களுக்கு சாதகமான முறையில் கொமன்வெல்த் நாடுகளின் தலையீட்டை இலங்கை பிரச்னையில் ஏற்படுத்த முயல்வதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கொமன்வெல்த்தின் தலையீட்டிற்கு, ஸ்கன்டிநேவியன் நாடுகளின் அங்கீகாரத்தையும் புலிகள் ஏற்படுத்த முயல்வதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கை பிரச்சினையில் ஐ நாவின் தலையீடு ஏற்படும் சாத்தியம் அதிகரித்து வருவதாக 'சண்டே ஒப்சவர்' பத்திரிகையில் அரசியல் விமர்சகர் திரு. அனுருத்த திலகசிறி வலியுறுத்தி வருவதும் தெரிந்ததே. (சி)

## யாழ். நகரில் 11-ம் திகதி வெகுஜனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் இராணுவ அழுத்தங்கள், பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை போன்றவற்றையும் மற்றும் அத்தியாவசிய சேவைகளை புறக்கணித்து வருவதையும் வன்மையாக ஆட்சேபித்து எதிர்வரும் 11-ம்

(4-ம் பக்கம் பார்க்க)

## 2-ம் கட்டப் பேச்சு அடுத்தவாரம் நடைபெறும்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகருக்கும், அமைச்சர் ஏ. സി எஸ். ஹமீத்திற்குமிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் அடுத்த வாரம் இடம்பெறலாமென கனடாவிலிருந்து வெளிவரும் 'செந்தாமரை' என்ற தமிழ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரிராணுவம் வாபஸ்பெற யூ.என்.எச்.சி.ஆர். கோரும்

(கொழும்பு)

பூநகரி - சங்குப்பிட்டி பகுதியிலுள்ள இராணுவத்தினரை வாபஸ்பெறுமாறு அரசை அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யு. என். எச். சீ. ஆர்) கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிவாரண உதவிக்காக அத்தியாவசிய மருந்து மற்றும்

(4ம் பக்கம் பார்க்க)

## பின்போடப்பட்ட ஜனாதிபதி தேர்தல் புதிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது

(கொழும்பு)

இந்தவருடம் அவசரமாக நடாத்துவதற்கு அரசினால் திட்டமிடப்பட்டிருந்த ஜனாதிபதித் தேர்தல் 1994-ம் ஆண்டுக்குப் பின்போடப்பட்டதன் மூலம் அரசு பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதாக அரசியல் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படும் என்ற திட்டத்தில் அரசு தோட்டத்தொழிலாளர்கள், ஆடைதயாரிப்பு தொழிற்சாலை ஊழியர்கள் ஆகியோரின் சம்பளத்தை 2000 ரூபாவாக அதிகரித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## நோவு வைத்தியம்

ஒட்டகபுலம் சமசித்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–7052)

## தவறிவிட்டது

கோப்பாய் - வலிகாமம் - யார்க்கரு வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை (1-1-93) பேர்ஸொன்றுடன் 3,200 ரூபாய் பணம் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். சோமசுந்தரம் ஞானசுந்தரம், செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி அல்லது கிருஷ்ணா பத்திரிகை விற்பனை நிலையம், ஆஸ்பத்திரி தரிப்பிடம், மந்திகை. புலோலி. (எ-2761)

## அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் - 7-வது இதழ் 12 1-93ல் வெளியாகும். வாசகர்களின் - முக்கிய மாக உயர் வகுப்பு மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு, இலாப நோக்கின்றி வெளிவருகிறது. பிரதி ரூபா 10/- மட்டுமே. (ஏ-2763)

## நோயாளர்களுக்கு அன்பளிப்பு

'பண்டத்தரிப்பு'

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தினர் தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலை மன நோயாளர் வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறறு வரும் நோயாளர்களுக்கு சாரங்கள், சேர்ட்டுகள் சாக்கள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். -7₂

06-01-1993

(தமிழுக்கு மார்கழி 22)

புதன்கிழமை

(திரயோதசி மு. இ. 9-33 வரை. ரோகிணி ந. ப 12-16 வரை சித்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12-31 முதல் 2-01 வரை. சுபநேரம் மாலை 5-05 முதல் 6-31 வரை பிரதோஷ விரதம்.)

## இராசி பலன்

மேஷம்: தொழில் முடக்கம் சங்கடமான நிலை, பண முடை.

இடபம்: தனலாபம், தியாக உணர்ச்சி முக்கிய நிகழ்ச்சி.

மிதுனம்- பயண பயம், வீண் விரமம், தொழில் கஷ்டம்.

கடகம்: சகோதர நன்மை, தொழில் மேன்மை, காரிய சித்தி.

சிங்கம்: நிர்ப்பந்தம் தொழில் உறவு, குடும்ப சந்தோசம்.

கன்னி: மனஸ்தாபங்கள், உடல் அசதி. குடும்ப கஷ்டம்.

துலாம்: நண்பரால் அலைச்சல். இடையூறு, கருத்து மோதல்.

விருச்சிகம்: கலகலப்பு உன்னதநிலை, தெய்வ தரிசனம்.

தனுசு: குடும்ப சுகம், உறவினர் நன்மை, காரிய சித்தி.

மகரம்: தைரிய குறைவு, வீண் வம்பு, மனக் குழறல்.

கும்பம்: தொழில் நஷ்டம், வாக்குப் பகை, காரிய தாமதம்.

மீனம்: கடுமையான உழைப்பு, பொருளாதார வசதி, வெற்றிவாய்ப்பு.

- ஜோஸ்யர்.


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY, - VADDUKODDAI.

யாழ்ப்பாணத்திலும், வட்டுக்கோட்டையிலும் முழுநேரப் பயிற்சி நெறிகள் பெப்ரவரி 1993இல் ஆரம்பமாகவுள்ளன.

வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

(1) Technician Dipolma Course

(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) Civil Engineering

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம்-C, விஞ்ஞானம்-C, ஆங்கிலம்-S உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: 2 வருடங்கள்

(2) Diploma Course

(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)

(ii) Computer Programming & Data Processing

BASIC, COBOL & D BASE iii + Practical on IBM-PC, AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை: G. C. E (O/L) கணிதம் - C, உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing

(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம்-C, ஆங்கிலம்-S உடன் G. C. E. (A/L ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி.

காலம்: ஒரு வருடம்

(3) Technician Certificate Course

(i) Radio & TV Servicing.

காலம்: 1 வருடம்

(ii) Automobile Technology -

காலம்: 1 வருடம்

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம்-S, விஞ்ஞானம்-S.

(4) Craft Certificate Course

(தமிழ் மூலம்)

(i) இயந்திரசாலைப் பயிற்சி காலம்: 1 வருடம்

(Machine Shop Practice)

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

(1) Technician Diploma Course

(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) Civil Engineering

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம் - C. விஞ்ஞானம் - C. ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 2 வருடங்கள்

(2) Diploma Course

(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)

(ii) Computer Programming & Data Processing

(BASIC, COBOL & d BASE iii+) Practi al on I B M - PC, AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை: G. C E (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 1 வருடம்

(iii) Advanced Diploma in Computing

(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G. C. E. (A/L ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி.

காலம்: ஒரு வருடம்

(3) Engineering Course

Full time preparing students for E. C. E.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெற்றிடம்

காவற்பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவி

POST OF CARETAKER (Lower Grade)

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து காவற்பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 01-24-ஆம் திகதி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பளத்திட்டம்:

ரூபா 1775 - 8 x 30-2015/- மாதமொன்றுக்கு அரசாங்கத்தினுல் வழங்கப்படும்.

(இவை தவிர / வாழ்க்கைச் செலவுப்படியும் ஏனைய படிகளும் செலுத்தப்படும்)

தகைமைகள்:

1) எழுதுவதற்கும் வாசிப் ...

பொருட்களைப் பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த தொகையான ஆட்களுக்கு ஒவ்வொருவகையான உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் அளவு குறித்துப் பயிச்சயமுள்ளவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர். துணைவேந்தர் விடுதியிலேயே தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு- பொதுஉளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/நாயகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-ற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 x 10 ச. மீ. அளவுடை ...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெற்றிடம்

### காவற்பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவி

### POST OF CARETAKER (Lower Grade)

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து காவற்பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 01-24-ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பளத்திட்டம்:

ரூபா 1775 - 8 x 30-2015/- மாதமொன்றுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

(இவை தவிர / வாழ்க்கைச் செலவுப்படியும் ஏனைய படிகளும் செலுத்தப்படும்)

தகைமைகள்:

1) எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

2) சமையலிலும் தளபாடங்கள் மட்பாண்டத் தொகுதி, வெட்டுக் கருவிகளின் தொகுதி, துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும் சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

பொருட்பதிவேட்டைப் பேணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

அ) மேலே கூறப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழே தரப்பட்ட தகைமைகளையும் உடையவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளைத் தயாரிப்பதில் அறிவு உள்ளவர்.

பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ராக இருபதுடன் குறித்த தொகையான ஆட்களுக்கு ஒவ்வொருவகையான உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் அளவு குறித்துப் பரிச்சயமுள்ளவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர், துணைவேந்தர் விடுதியிலேயே தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு- பொதுஉளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-ற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 x 10 ச. மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா /-முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி.
1992-12-29.

(எ-2760)

---

விஞ்ஞானம்-C, ஆங்கிலம்-S உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: 2 வருடங்கள்

## (2) Diploma Course

(ஆங்கில மூலம்)

(i) **Draughtsmanship (Civil)**

(ii) **Computer Programming & Data Processing**

BASIC, COBOL & D BASE (iii +) Practical on IBM-PC, AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை: G. C. E (O/L) கணிதம் - C, உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: ஒரு வருடம்

(iii) **Advanced Diploma in Computing**

(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை: G C. E (O/L) கணிதம்-C, ஆங்கிலம்-S உடன் G. C. E. (A/L) ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி.

காலம்: ஒரு வருடம்

## (3) Technician Certificate Course

(i) **Radio & TV Servicing.**

காலம்: 1 வருடம்

(ii) **Automobile Technology -**

காலம்: 1 வருடம்

கல்வித்தகைமை: G. C. E. (O/L)ல் கணிதம்-S, விஞ்ஞானம்-S.

## (4) Craft Certificate Course

(தமிழ் மூலம்)

(i) இயந்திரசாலைப் பயிற்சி காலம்: 1 வருடம் (Machine Shop Practice)

(ii) பொருத்துனர் பயிற்சி காலம்: 6 மாதங்கள் (Fitters Practice)

(iii) ஒட்டுனர், கட்டுமானர் பொருத்துனர் பயிற்சி காலம்: 1 வருடம் (Welding, Fabrication & Fitting)

(iv) மின்னிணைப்பு பயிற்சி காலம்: 1 வருடம் (Electrical Wiring & Installation Practice)

கல்வித்தகைமை: G.C.E. (O/L) வரை படித்திருத்தல் வேண்டும்.

## (1) Technician Diploma Course

(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) **Civil Engineering**

கல்வித்தகைகை: G. C. E. (O/L) கணிதம் - C. விஞ்ஞானம் - C. ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 2 வருடங்கள்

## (2) Diploma Course

(ஆங்கில மூலம்)

(i) **Draughtsmanship (Civil)**

(ii) **Computer Programming & Data Processing**

(BASIC, COBOL & d BASE iii+) Practical on I B M - PC, AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை: G. C E (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 1 வருடம்

(iii) **Advanced Diploma in Computing**

(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G. C. E. (A/L ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி.

காலம்: ஒரு வருடம்

## (3) Engineering Course

Full time preparing students for E. C. E. Part - I (London) Exam & JESL Part I Exam.

**Qualification:** G. C. E. (A/L) Maths with 3 or 4 Passes in two sittings

### விசேட கவனத்திற்கு

★ பிறநாட்டு பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்த எல்லா பாடநெறிகளும ஆங்கில மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்கு துணையாக பாடநெறி காலம் முழுவதும் ஆங்கில பாடம் கட்டாயமாக படிப்பிக்கப்படும்.

★ பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்குமிடத்து உதவித் தொகை வழங்கப்படும்.

★ நூலக வசதி உண்டு.

முக்கிய குறிப்பு:

★ விண்ணப்பப்படிவம் விலை ரூபா 30/-

பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள்:

(a) J. C. I. T. அலுவலகம் வட்டுக்கோட்டை.

(b) J. C I. T, 182, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

★ விண்ணப்பபடிவங்களை 20-01-1993 காலை 10-00 மணிக்கு முன்னர் J. C. I. T. அலுவலகம் வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

★ போதியளவு மாணவர் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

(2718)

பணிப்பாளர்

# 'புக்காரா' யுத்த விமானங்கள் வந்து சேர்ந்தன

# போரை தொடர முடியாது அரசு திண்டாட்டம்

போக்குவரத்து விமானமான ஹேர்குலீஸ் சி 131 பயணிகள் விமானம் கொழும்பு விமான நிலையத்தை கடந்த புதன்கிழமை வந்தடைந்து கட்டுநாயக்காவில் உள்ள ஸ்ரீலங்கா விமானப்படைத் தளத்தை நோக்கிச்சென்றது.

ஸ்ரீலங்கா விமானப்படையினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டதும் சர்ச்சைக்குரியதும் தற்பொழுது உற்பத்தி அற்றதுமான 'புக்காரா' போர் விமானம் இந்த ஹேர்குலீஸ்' விமானத்திலிருந்து இறக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையில் இருந்தோ அல்லது அரசாங்கத்திலிருந்தோ புலிகளுக்கு எதிரான புதிய தாக்குதலுக்கான எந்தவிதசமிக்ஞைகளும் அற்ற நிலையில் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளும் இல்லாத நிலையே உருவாகி உள்ளது.

தெரிவுக்குழு சம்பந்தமான ஒருமைப்பாடு குறித்து ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக் கட்சியும் விவாதித்துவருகின்றன.

எதிர்க்கட்சிகள் புலிகளின் நிலைப்பாட்டில் பலவீனத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தி வடக்கு-கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் தெரிவுக்குழுவின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள செய்யவும் முயற்சிக்கின்றன.

புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர்களைப் பலவீனப்படுத்தி அதிகாரப் பரவலாக்கல் மூலம் கருத்துக் கணிப்பொன்றினை பெறலாம்.

இந்நிலையில் இருந்து அரசாங்கம் அரசியல், இராணுவ நிலைப்பாட்டை மீண்டும் புதுப்பித்து ஓர் இறுதியான கணிப்பினை கருத்தில் கொண்டு அதன் செயல்பாட்டினை அறிந்துகொள்ளலாம்.

தற்பொழுது உயர் மட்டங்களில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதன் காரணமாக இராணுவ அணுகுமுறையின் வேகம் குறைக்கப்பட்டதினால் அதனைத்தொடர்வது இயலாதென்பது ஒரு பகிரங்க ரகசியமாகும்.

இராணுவத்தில் இருந்து பெருந்தொகையானவர்கள் ஓடிச் செல்வதாலும் போரின் போது தரையில் ஏற்படும் இழப்புக்களினாலும் இராணுவ ரீதியான முன்னெடுப்பு குறைந்ததொரு நிலையிலேயே உள்ளது.

ஐ.தே.கவும் சுதந்திரக்கட்சியும் இராணுவ மேலிடத்தை கட்டுப்படுத்தாவிடில் காலப்போக்கில் அரசாங்கம் பாதிப்புறும் நிலைக்கு தள்ளப்படும்.

இதன்பிரகாரம் படைத்தளபதிகள் கூட்டுப்படைத் தலைமைப்பீடத்தின்கீழ் இல்லையென்றும் அவர்கள் சுதந்திரமான ஒரு செயற்பாட்டையே செய்யலாம் என்றும் கூறப்பட்டது.

பாதுகாப்புச் சேவை மட்டத்தில் 1991 ம் ஆண்டு கூட்டுப் படைத் தலைமையக முறை மீண்டும் அறிமுகப்படுத்தப் பட்டதும் அதன் பின்னர் அவர்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுபடைத்தளபதிகளிடம் கொடுக்கப்பட்டு மீண்டும் மோத காலத்தின் பின்னர் படைத் தளபதிகளிடமிருந்து அவ்வதிகாரங்கள் பறிக்கப்பட்டு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டமை படையினர் மத்தியில் தளர்வு நிலையை ஏற்படுத்தியது.

இன்றைய நிலையில் படைத் தளபதிகள் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் தற்போது கடமைபுரிகின்றனர். படைத் தளபதிகளும் கூட்டுப்படைத்தலைமையகமும் ஓர் விடயத்தில் மாத்திரம் ஒற்றுமைகாண்கின்றனர். போரில் கூடுதலான படையினரை ஈடுபடுத்த வேண்டுமென்று அவர்கள் கோருவதே இதுவாகும்.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன, ஏற்கனவே தனக்கு வேண்டிய இராணுவ ஆளணி பலத்தை தந்திருந்தால், இப் போரை தான் துரிதமாகமுடிவுக்குக்கொண்டு வந்திருப்பேன் என்றார்.

இத்தேவை போர் முனைகளில் வேண்டும் என்ற நிலைப்பாடு முன்னர் தளபதி ஹமில்டன் வனசிங்காவினால் பாதுகாப்புச் செயலா சிறில் ரணதுங்காவுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டுப் படைத் தலைமையகப் பொறுப்பை 1990ல் ஏற்றுக்கொண்ட ஜெனரல் ஹமில்டன் வனசிங்க மீண்டும் தனது கோரிக்கையை தெரிவித்திருந்தார். அச்சந்தர்ப்பத்தில் மிகக் குறைந்த இராணுவத்தினரே சேவையை விட்டு விலகியதுடன் இளைஞர்கள் மத்தியில் இராணுவத்தில் சேர்வதற்கான நல்லெண்ணமும் இருந்தது.

அத் தருணத்தில் அரசாங்கம் வேண்டிய ஆளணியைக் கொடுத்து போரை முடிவுக்குக் கொண்டுவர இயலாமல் இருந்தது.

ஜெனரல் வனசிங்கா ஒரு இரகசியக் கடிதத்தில், இந்தப் போரை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான ஆளணித் தேவையை தெரிவித்ததோடு, 80,000 படைகள் வடக்கு—கிழக்கு மாகாணத்தில்போரிடுவதற்கு தேவையெனக் கோரியிருந்தார்.

தற்பொழுது வடக்கு—கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை இத்தொகைக்கு அண்மித்ததாகவும் இல்லை.

ஜெனரல் வனசிங்காவின் தேவைகள் தரை நிலையில் இன்றைறிலும் பார்க்க குறைந்த இழப்புக்களை சந்திப்பதற்கான ஒரு நிலையைத்தான் கோரியிருந்தார். படைகள் மத்தியிலும் உயர் அதிகாரிகள் மத்தியிலும் இழப்புக்களின் விகிதாசாரம் அன்றைய நிலையில் குறைந்தே காணப்பட்டது.

இந்தக் கோரிக்கை விடப்பட்ட நேரத்தில் இருந்து இது வரைக்கும் அரசு அதி உயர்ந்த பதவிகள் வகித்த கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னாண்டோ டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்தினவுடன் இன்னும்பலரை இழந்துள்ளது.

இன்றைய சூழ்நிலையைப் பார்க்கும் போது பாதுகாப்புச்சேவையின் ஆளணிகள், புலிகளை வெல்வதற்கு கூடுதலாக தேவையாக உள்ளது.

இதன்காரணமாக ஜெனரல் வனசிங்காவுக்கு வழங்கப் பட்ட கடமையின் நிமித்தம் போரைநடாத்துவதற்கும் நன்கு கொடுக்கப்பட்ட தரவுகளின்பிரகாரம் குறைபாடுஇருப்பதினால் இச்செயற்பாட்டை செய்ய முடியாத நிலை உருவாகியதுடன் தற்போது உள்ள படைகளின் எண்ணிக்கையுடன் தான் திருப்தி கொண்ட நிலையில் இருக்கவேண்டிய நிலையில் உள்ளார்.

அரசாங்கம் இது சம்பந்தமாக தனது நிலைப்பாட்டை சரியான முறையில் கணக்கெடுத்து வடக்கு கிழக்கில் எவ்வாறு சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும் என்பதையும் அங்குள்ள நிர்வாகத்தை நடாத்துவதற்கான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதித்தேர்தல் 1994ல் வரை நடைபெறமாட்டாது, எனஜனாதிபதிதெரிவித்திருப்பதால் இது சிலரிடம் ஒருவித பிழையானகருத்தை உருவாக்கியதுடன் தற்போது நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டுவர எந்தவிதமான அவசரமான நிலைமையும் இல்லை என உணர்த்துகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இப்போரை முடிவுக்கு கொண்டுவந்து ஓர் நிரந்தரமான தீர்வை உருவாக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து, தற்பொழுது அப்படியான ஓர் உடனடி முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற நிலை இல்லையென்பதே ஆய்வாளரின் கருத்துக்களாகும்.

புலிகளுடன் முழுமையான ஒரு போரை ஆரம்பிப்பதா? அல்லது இரகசியமாகவோ அல்லது வேறு விதமாகவோ ஓர் தீர்வு காண்பதா என அரசு தீர்மானிக்கவேண்டும்.

தற்பொழுது இராணுவத்தின் நடவடிக்கை குறைவாகவேஉள்ளது எனினும் கூட்டுப் படைத் தலைமையகத் தளபதியின் இராணுவத் தேவைகளை வழங்குவதாக இருந்தாலும் இராணுவ வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக தென்படுகிறது.

மறுபக்கத்தில் அரசாங்கம் புலிகளிடம் மிகவும் கடினமான ஒரு நிலைப்பாட்டை எதிர்நோக்கவுள்ளது. ஏனெனில் அவர்கள் வடக்கு கிழக்கை இணைத்து அதனை பாரம்பரிய தாயகமாக கொள்வதுடன், பொலிஸ் காணி சம்பந்தமான விடயங்களில் கூடுதலான அதிகாரங்களை கோருவர்.

ஆகையினால் இப்புத்தாண்டில் அரசாங்கம் இக்கட்டான ஒரு சூழ்நிலையை எவ்வாறு எதிர்நோக்கப் போகின்றது என்பது பெருத்த கேள்வியே

(நன்றி: சண்டேரைம்ஸ்)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வரிவளவு நலியக்கச் சபை ஐந்தாம் ஆண்டு 1992 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த 16 காரைநகர் மாணவர்களை பாராட்டி பரிசில் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணத்தில் ஐடியல் கல்வி நிலையத்தில் இன்று காலை 11-00 மணிக்கும் வட்டு திருஞான சம்பந்த வித்தியாலயத்தில் நாளை காலை 9-00 மணிக்கும் நடைபெறும். இவ் வைபவத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. பரமலிங்கம் சண்முகராசா பிரதம விருந்தினராகக் கலந்து பாராட்டி பரிசில்கள் வழங்குவார்.

## விழித்தெழுவோம் ஒலிநாடா இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் படையினரால் உருவாக்கப் பட்ட "விழித்தெழுவோம்" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைப்பார்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர்

...கேற்றி வைப்பார்.

வரவேற்புரையை செல்வி தமிழவளும், வெளியீட்டுரையை செல்வி மலைமகளும், சிறப்புரைகளை செல்வி ஜெனனி, கவிஞர் மு. வேதயோ. வாஞ்சிநாதன், பா. நடேசன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

மதிப்புரைகளை திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி க. சிதம்பரநாதன், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் நடாத்துவர்.

ளது.

தெரிவுக்குழு சம்பந்தமான ஒருமைப்பாடு குறித்து ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக் கட்சியும் விவாதித்துவருகின்றன.

எதிர்க்கட்சிகள் புலிகளின் நிலைப்பாட்டில் பலவீனத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தி வடக்கு-கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் தெரிவுக்குழுவின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள செய்யவும் முயற்சிக்கின்றன.

புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர்களைப் பலவீனப்படுத்தி அதிகாரப் பரவலாக்கல் மூலம் கருத்துக் கணிப்பொன்றினை பெறலாம்.

இந்நிலையில் இருந்து அரசாங்கம் அரசியல், இராணுவ நிலைப்பாட்டை மீண்டும் புதுப்பித்து ஓர் இறுதியான கணிப்பினை கருத்தில் கொண்டு அதன் செயல்பாட்டினை அறிந்துகொள்ளலாம்.

தற்பொழுது உயர் மட்டங்களில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதன் காரணமாக இராணுவ அணுகுமுறையின் வேகம் குறைக்கப்பட்டதினால் அதனைத்தொடர்வது இயலாதென்பது ஒரு பகிரங்க ரகசியமாகும்.

இராணுவத்தில் இருந்து பெருந்தொகையானவர்கள் விடம் கொடுக்கப்பட்டு மீண்டும் மோதல் காலத்தின் பின்னர் படைத் தளபதிகளிடமிருந்து அவ்வதிகாரங்கள் பறிக்கப்பட்டு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டமை படையினர் மத்தியில் தளர்வு நிலையை ஏற்படுத்தியது.

இன்றைய நிலையில் படைத் தளபதிகள் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் தற்போது கடமைபுரிகின்றனர். படைத் தளபதிகளும் கூட்டுப்படைத்தலைமையகமும் ஒரே விடயத்தில் மாத்திரம் ஒற்றுமைகாண்கின்றனர். போரில் கூடுதலான படையினரை ஈடுபடுத்த வேண்டுமென்று அவர்கள் கோருவதே இதுவாகும்.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன, ஏற்கனவே தனக்கு வேண்டிய இராணுவ ஆளணி பலத்தை தந்திருந்தால், இப் போரை தான் துரிதமாக முடிவுக்குக்கொண்டு வந்திருப்பேன் என்றார்.

இதுதேவை போர் முனைகளில் வேண்டும் என்ற நிலைப்பாடு முன்னர் தளபதி ஹமில்டன் வனசிங்காவினால் பாதுகாப்புச் செயலா சிறில் ரணதுங்காவுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டுப் படைத் தலைமையகப் பொறுப்பை 1990ல் ஏற்றுக்கொண்ட ஜெனரல் படையினரின் எண்ணிக்கை இத்தொகைக்கு அனுமதித்ததாகவும் இல்லை.

ஜெனரல் வனசிங்காவின் தேவைகள் தரை நிலையில் இன்றைவிலும் பார்க்க குறைந்த இழப்புக்களை சந்திப்பதற்கான ஒரு நிலையைத்தான் கோரியிருந்தார். படைகள் மத்தியிலும் உயர் அதிகாரிகள் மத்தியிலும் இழப்புக்களின் விகிதாசாரம் அன்றைய நிலையில் குறைந்தே காணப்பட்டது.

இந்தக் கோரிக்கை விடப்பட்ட நேரத்தில் இருந்து இது வரைக்கும் அரசு அதி உயர்ந்த பதவிகள் வகித்த சரியான முறையில் கணக்கெடுத்து வடக்கு கிழக்கில் எவ்வாறு சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும் என்பதையும் அங்குள்ள நிர்வாகத்தை நடாத்துவதற்கான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும்

ஜனாதிபதித்தேர்தல் 1994ம் வரை நடைபெறமாட்டாது. என ஜனாதிபதிதெரிவித்திருப்பதால் இது சிலரிடம் ஒருவித பிழையானகருத்தை உருவாக்கிதுடன் தற்போது நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டுவர எந்தவிதமான அவசரமான நிலைமையும் இல்லை என உணர்த்துகிறது.

மறுபக்கத்தில் அரசாங்கம் புலிகளிடம் மிகவும் கடினமான ஒரு நிலைப்பாட்டை எதிர்நோக்கவுள்ளது. ஏனெனில் அவர்கள் வடக்கு கிழக்கை இணைத்து அதனை பாரம்பரிய தாயகமாக சொல்வதுடன், பொலிஸ் காணி சம்பந்தமான விடயங்களில் கூடுதலான அதிகாரங்களை கோருவர்.

ஆனையிறவில் இப்புதிதாண்டில் அரசாங்கம் இக்கட்டான ஒரு சூழ்நிலையை எவ்வாறு எதிர்நோக்கப் போகின்றது என்பது பெருத்த கேள்வியே

(நன்றி: சண்டேரைம்ஸ்)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வரிவளவு நலியக்கச் சபை ஐந்தாம் ஆண்டு 1992 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த 16 காரைநகர் மாணவர்களை பாராட்டி பரிசில் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணத்தில் ஐடியல் கல்வி நிலையத்தில் இன்று காலை 11-00 மணிக்கும் வட்டு திருஞான சம்பந்த வித்தியாலயத்தில் நாளை காலை 9-00 மணிக்கும் நடைபெறும். இவ் வைபவத்தில் பிரதிக் கல்விப்பணிப் பாளர் திரு. பரமலிங்கம் சண்முகராசா பிரதம விருந்தினராகக் கலந்து பாராட்டி பரிசில்கள் வழங்குவார்.

★

(அச்சுவேலி)

சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அச்சுவேலி புனித திரேசாவ் மகளிர் கல்லூரியில் இன்று புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

திரு. தங்கத்தாமரைச் செல்வம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி ஆணையாளர் திரு.கே. சத்தியேஸ்வரனும், வலி-கிழக்கு அத்தியட்சகர் திரு. கே. சங்கரலிங்கமும் கலந்துகொள்கின்றனர். (71)

★

(நல்லூர்)

'யுனிசெவ்' உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்காக மாநகராட்சி மன்றம் நடாத்திய முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று புதன் கிழமை நடைபெறும்.

சுகாதார வைத்திய அதிகாரிபணி மனையில் யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும் வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி கலந்துகொள்வார். (158)

## விழித்தெழுவோம்
## ஒலிநாடா இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் படையினரால் உருவாக்கப்பட்ட "விழித்தெழுவோம்" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைப்பார்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். மாவட்ட தளபதி செல்வராஜா மங்கள விளக்கேற்றி வைப்பார்.

வரவேற்புரையை செல்வி தமிழவளும். வெளியீட்டுரையை செல்வி மலைமகளும், சிறப்புரைகளை செல்வி ஜெனனி, கவிஞர் மு. வேலுப்பிள்ளை, வாஞ்சிநாதன், பா. நடேசன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

மதிப்புரைகளை திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி க. சிதம்பரநாதன், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் நடாத்துவர்.

மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனு கலைஞர்களைக் கௌரவித்து உரையாற்றுவார்.

## தமிழோசை வீடியோ நாடா:
## தேசியத் தலைவரிடம் பரிசுபெற்ற கலைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

'தமிழோசை' வீடியோபடத்தினை இயக்கியமுல்லைமாவட்ட கலை, பண்பாட்டுக் கழக கலைஞர்கள், தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனிடமிருந்து பரிசுபெற்றனர். பரிசு பெற்ற கலைஞர்களின் விபரம் வருமாறு:

நடிகைகள்:

செல்வி இ. சுரேசினி, திருமதி. கமலாம்பிகை, திருமதி ம. தவமணிதேவி, செல்வி. கு. இதயராணி, செல்வி அ சகுந்தலா, செல்வி. ஜெயந்திமலர், செல்வி அ மாங்கனி, திருமதி சந்திரா, செல்வி மதி.

நடிகர்கள்:

கி. தவராசா, இ. சந்திரரூபன், ச. கந்தசாமி வே. கோபி, ச. ஜேசுதாஸ். ந. சிவபாதம், அ. அழகேஸ்வரன், செ. அறிவழகன், த. திருச்செல்வம், ச. மோகனதாஸ், அருளம்பலம்.

பின்னணி இசைக்கலைஞர்கள் திரு. ச. மகாலிங்கம் திரு. சி. மனோகரன், திரு. அருணா, திரு. எஸ். பி. செல்வன்.

படப்பிடிப்பாளர்கள்;

செல்வன் சுதா, செல்வன் வ. சந்திரன்.

இயக்குனர்; திரு. பொ. தாசன்.

போராளிக்கலைஞர்கள்:

முகுந்தன், அறிவு, தங்கப்பா, அருணன், வாசுராசா தென்முகன் (சாந்தன்), தவலி (கீர்த்தி), சங்கர், சாந்தன்.

## திருவாசகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் திருவாசகப் பெருவிழாவின் 3ம் இறுதி நாள் நிகழ்ச்சி விபரம் வருமாறு:

காலை நிகழ்ச்சிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ. இராசரத்தி

(4-ம் பக்கம் பார்க்க)


## 7-ம் ஆண்டு
## நினைவஞ்சலி



பூவுலகில்

8-10-1960

இறைவன் அடியில்

25-12-1985

திதி

06-01-1993

### செல்வி தங்கபூபதி முத்துவேல்

"கைலை உறைமலை அரசனின் பாதமலரடி பெற்று பூரண நித்திய சாந்திபெற வணங்குகின்றோம். நீங்கள் எமைவிட்டு நீங்கி ஆண்டுகள் 07 சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எமைவிட்டு அகலாது." உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

"பதிபவனம்",
சந்நிதி றோட்,
உடுப்பிட்டி.
(எ- 2762)

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி,
மாமா, மாமி, உற்றார்,
உறவினர்கள்.

# கடற்படையினர் பயணிகள் படகுகளை சுற்றிவளைத்து சுட்டனர்

## உயிர் தப்பியவர் பி. பி. ஸி.க்கு பேட்டி

(லண்டன்)

கடற்படையினர் பயணிகளின் படகுகளைச் சுற்றிவளைத்து சரமாரியாக சுட்ட பின்னர், அப்படகுகளை கட்டி இழுத்துச் செல்வதைக் கண்டேன்.

கிளாலிச் சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவர் பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் கிளாலிப் பகுதியில் ஆரம்பமான படகுச் சேவையின் முதல் படகில் நான் பயணம் செய்தேன் எமது படகு இயந்திரக் கோளாறினால் நடுக்கடலில் பழுதடைந்தது. அப்போது எம்மைத் தாண்டிப் பல படகுகள் சென்றன. சிறிது நேரத்தின் பின் பாரிய சூட்டுச்சத்தங்களும், வெடிச்சத்தங்களும், ஷெல்சத்தங்களும் பயணிகளின் அபயக்குரல் சத்தங்களும் கேட்டன.

அடுத்த நாள் காலை கிளிநொச்சிக்கு வந்தபோது வெட்டுக்காயங்களுக்குள்ளாகி பலர் இறந்துகிடப்பதைக் கண்டேன் இறந்து கிடப்பவர்களில், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரின் உடலையும் கண்டேன்.

இறந்தவர்கள் அனைவரும் முழுக்க முழுக்க பொதுமக்கள் தான் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும், என்றும் கூறினார். (வி)

---

திருவாசகப்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

னம் தலைமையில் நடைபெறும். திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். இதைதொடர்ந்து மகளிர் மன்றமும், 'வண்ணைக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ' எனும் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் யாழ். இந்து அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும். யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நாக. சண்முகநாதபிள்ளை தலைமையில் பல கவிஞர்கள் பங்குபற்றும் கவியரங்கம் நடைபெறும். இதையடுத்து அகில இலங்கை கம்பன் கழகத்தினர் பங்குபற்றும் "வழக்காடு மன்றமும்' இடம்பெறும். (சி)

---

புலிகள் வாகனம் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் ஆளம் வைத்து நேற்று முன்தினமிரவு எட்டு மணியளவில் யூகோஸ்லாவிய தயாரிப்பான M - 75 புதிய ரக கைக்குண்டு கிறனேற் புலிகளின் 'பஜ்ரோ' வாகனம் மீது வீசப்பட்டது. எனினும் இக்குண்டு வாகனம் மீது படாது நிலத்தில் வீழ்ந்து வெடித்துள்ளது.

வாகனம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில், வெடித்தது கைக்குண்டு என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக மேற்படி கைக்குண்டுக்குரிய அடங்கும் போல்ஸ், லிவர், பிளாஸ்ரிக் துண்டுகள் என்பன குண்டு வெடித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

மேலும் குண்டுத்தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் 'ஏசியா' சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது. இவரைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதேவேளை தங்கள் பகுதிகளில் நடமாடும் புதியவர்கள், சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டங்கள் குறித்து உடனுக்குடன் தகவல் தெரிவிப்பதுடன் மக்கள் விழிப்புணர்வுடனும் இருக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (சி)

---

## படகு சேவை ஆரம்பம்

(பனை)

கிளாலிப் படகுச் சேவை மீண்டும் ஆரம்பமானது இச் சேவையில் 50 படகுகள் பரீட்சார்த்தமாக கிளாலி கரையிலிருந்து ஆலங்கேணிக்கு சென்றது படகுகளுக்கு கடற்புலிகள் பாதுகாப்பு வழங்கினர்.

படகுகள் சென்ற சமயம் கடலில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாக கரையில் நின்றவர்கள் தெரிவித்தனர். (156)

---

பூநகரி ராணுவம்

1-ம் பக்கத்தொடர்ச்சி)

உணவுப் பொருள்களை குடாநாட்டிற்கு கொண்டுவருவதற்காக இப்பகுதியினரை அகற்றுமாறு இவ் அமைப்பு கோரவுள்ளது.

இவ்விடயத்தில் இப்பாதையை உடனடியாக திறப்பது குறித்து அரசுடனும் - புலிகளுடனும் இவர்கள் தொடர்ந்தும் பேச்சுக்களை நடாத்தி வருவதாகவும் இதன் மூலம் மேற்படி நிவாரணப் பொருட்களை குடாநாட்டிற்கு கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாரிஸில் புலிகளுடனான பேச்சில் மேற்படி பாதை திறப்பது குறித்தும் அமைச்சர் ஹமீத் பேசியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

---

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர்

அருள்மிகு வாலாம்பிகா சமேத

## விசுவலிங்க வைத்தீசுவரசுவாமி திருக்கோவில்

(வண்ணை சிவன் கோயில்)

## திருவாசகப் பெருவிழா

(நிறுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்)

தவிர்க்க முடியாத காரணத்தினால் 05 - 01 - 1993 செவ்வாய்க்கிழமை முற்பகல் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டதையிட்டு வருந்துகின்றோம். அந்நிகழ்ச்சிகள் 05 - 01 - 1993 செவ்வாய்க்கிழமை முற்பகல் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறே 07 - 01 - 1993 வியாழக்கிழமை முற்பகல் நிகழவுள்ளன என்பதைப் பங்குபற்றுவோர்க்கும் ஏனையோர்க்கும் அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

06 - 01 - 1993 (ஏ-2764)

---

2-ம் கட்டப் பேச்சு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இது பற்றி 'ராய்ட்டர்' செய்தி ஏஜென்ஸி தெரிவிக்கையில்: ஜனாதிபதி தேர்தல், மற்றும் மாகாண சபைத்தேர்தலுடன் தொடர்புபட்டதாகவே இந்தப் பேச்சுக்கள் அமைகிறது.

இப்பேச்சுக்கள் மூலம் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுமானால் அதன் மூலம் பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கும் எதிர்க்கட்சியினரைத் தோற்கடித்து அடுத்த ஆறு மாதங்களினுள் இத்தேர்தல்களை நடாத்தி வெற்றிபெற ஐ. தே. க. முயன்று வருகிறது. (சி)

---

யாழ். குடா மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிவியூ' ஆசிரியர் திரு. காமினி நவரட்ண: இத்தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டுமென வும் இதன் மூலம் படுமோசமான விளைவுகள் ஏற்படுமெனவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: சிங்களத் தலைவர்கள் இணங்கினால் இப்போதும் நல்லதொரு தீர்வை ஏற்படுத்தலாம். இப்பிரச்சினைக்கு முழுப்பொறுப்பையும் புலிகள் மீது சுமத்துவது தவறு. அவர்கள் இப்பிரச்சினைக்கு நேரடிப் பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காண 1989ல் இருந்து பலமுறை முயன்றும் அதற்குச் சரியான மதிப்புக் கொடுக்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் எல்லோரும் பொறுப்பேற்க வேண்டும். இராணுவரீதியான தீர்வை அரசியல் தலைவர்கள் கைவிட்டால் இப்போதும் அரசியல்தீர்வு பொருத்தமாய் உள்ளது உள்ளது எனக்கூறியுள்ளார். (சி)

---

தாக்குதலை நடத்தும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களை நடாத்தி அதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை இழக்க அரசு விரும்பவில்லையாம்.

அண்மைக்கால தேர்தல்கள் இதனை நன்கு சுட்டிக்காட்டியுள்ளதாம். இதேவேளை எதிர்வரும் தேர்தல்களை முன்னிட்டு எதிர்க்கட்சிகளும் பொதுக் கூட்டணி ஒன்றை அமைக்கும் நோக்கில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனராம். (சி)

---

கிளாலி சம்பவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இறந்துள்ளார்கள் என்று அத்தந்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் கிளாலிக் கடலில் பயணம் செய்த பொதுமக்களின் படகுகள் மீது படையினர் கண்மூடித்தனமாக குண்டுமாரி பொழிந்ததினால் 14 பொதுமக்கள் இறந்துவிட்டார்களென்று, வவுனியா அரச அதிபர் திரு. எம். பொன்னம்பலம் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (வி)

---

லலித், காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. லலித் அத்துலத்முதலி கொழும்பு மாவட்டத்துக்காக மேல்மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும், திரு. காமினி திஸநாயக்கா கண்டி மாவட்டத்துக்காக மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும் திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா குருநாகல் மாவட்டத்துக்காக வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும் போட்டியிடவுள்ளனர். (வி)

---

## முன்னோடிப் பரீட்சை முடிவுகள்:

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு முடிவுகள், நேற்று வெளியிடப்பட்டன.

இம்முடிவுகளின்படி யாழ். மாவட்டத்தில் 13 மாணவர்கள் 8 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 பாடங்களிலும் விசேட சித்திபெற்ற மாணவர்களைக் கொண்ட சில பாடசாலைகளின் விபரம் வருமாறு:-

கொக்குவில் இந்துக்கல்லூரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து தலா இரு மாணவர்கள் 8 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர். (159)

---

யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி) திங்கட்கிழமை யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 55 க்கும் மேற்பட்ட வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 11-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டப்பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளும்படி தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. கு சிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வி)

---

ஜனாதிபதியின்

1-ம் பக்கத்தொடர்ச்சி)

ந்து கைக்குண்டு என்பவை த உறுதிப்படுத்தக்கூடியதாக மேற்படி கைக்குண்டுக்குள் அடங்கும் போல்ஸ், லிவர், பிளாஸ்ரிக் துண்டுகள் என்பன குண்டு வெடித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

மேலும் குண்டுத்தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் 'ஏசியா' சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது. இவரைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்தவேளை தங்கள் பகுதிகளில் நடமாடும் புதியவர்கள், சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டங்கள் குறித்து உடனுக்குடன் தகவல் தெரிவிப்பதுடன் மக்கள் விழிப்புணர்வுடனும் இருக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (சி)

---

உ

**சிவமயம்**

**யாழ்ப்பாணம் திருவண்ணைநகர்**

**அருள்மிகு வாலாம்பிகா சமேத**

# விசுவலிங்க வைத்தீசுவரசுவாமி திருக்கோவில்

**(வண்ணை சிவன் கோயில்)**

# திருவாசகப் பெருவிழா

**(நிறுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்)**

தவிர்க்க முடியாத காரணத்தினால் 05 - 01 - 1993 செவ்வாய்க்கிழமை முற்பகல் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டதையிட்டு வருந்துகின்றோம். அந்நிகழ்ச்சிகள் 05 - 01 - 1993 செவ்வாய்க்கிழமை முற்பகல் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறே 07 - 01 - 1993 வியாழக்கிழமை முற்பகல் நிகழவுள்ளன என்பதைப் பங்குபற்றுவோர்க்கும் ஏனையோர்க்கும் அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

06 - 01 - 1993 (ஏ-2764)

---

இப்பேச்சுக்கள் மூலம் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுமானால் அதன் மூலம் பிரச்னையை எதிர்நோக்கியிருக்கும் எதிர்க்கட்சியினரைத் தோற்கடித்து அடுத்த ஆறு மாதங்களினுள் இத்தேர்தல்களை நடாத்தி வெற்றிபெற ஐ. தே. க. முயன்று வருகிறது. (சி)

---

## யாழ். குடா மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிவியூ' ஆசிரியர் திரு. காமினி நவரட்ண: இத்தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டுமெனவும் இதன் மூலம் படுமோசமான விளைவுகள் ஏற்படுமெனவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: சிங்களத் தலைவர்கள் இணங்கினால் இப்போதும் நல்லதொரு தீர்வை ஏற்படுத்தலாம். இப்பிரச்னைக்கு முழுப்பொறுப்பையும் புலிகள் மீது சுமத்துவது தவறு. அவர்கள் இப்பிரச்னைக்கு நேரடிப் பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காண 1989ல் இருந்து பலமுறை முயன்றும் அதற்குச் சரியான மதிப்புக் கொடுக்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் எல்லோரும் பொறுப்பேற்க வேண்டும். இராணுவரீதியான தீர்வை அரசியல் தலைவர்கள் கைவிட்டால் இப்போதும் அரசியல்தீர்வு பொருத்தமாய் உள்ளது உள்ளது எனக்கூறியுள்ளார். (சி)

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

# அறிவித்தல்

# கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவு

பின்வரும் கிளைகளுக்கு கீழ் குறிப்பிடப்படும் கிளை நிலையத்தில் 28-11-92ந் திகதி நடைபெற்ற நியமனப் பத்திரத்தாக்கலின்போது தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களுள் கிளைக் குழு உத்தியோகத்தர் தெரிவு இடம் பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்,

உத்தியோகத்தர் தெரிவு

| | கிளை இல. | இடம்பெறும் கிளை நிலயம் | காலம் |
|---|---|---|---|
| 1] | 24 ஏழாலை தெற்கு | 24, ஏழாலை மேற்கு | 10-01-93 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 2-00 மணி |
| 2] | 26 திடற்புலம் | 19, ஈவினை | ,, ,, ,, 3-30 ,, |
| 3, | 30 புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 19, ஈவினை | ,, ,, ,, 4-30 ,, |

சகல உறுப்பினர்களுக்கும் தனித்தனி நிகழ்ச்சிநிரல் உரிய முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்ச்சிநிரல் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை ஏற்று குறித்த தினத்தன்று, குறித்த கிளைக்கு சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்,
05 - 01 - 93

[ஏ-2765]

---

வரும் தேர்தல்களை முன்னிட்டு எதிர்க்கட்சிகளும் பொதுக் கூட்டணி ஒன்றை அமைக்கும் நோக்கில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனராம். (சி)

---

## கிளாலி சம்பவம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இறந்துள்ளார்கள் என்று அத்தந்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் கிளாலிக் கடலில் பயணம் செய்த பொதுமக்களின் படகுகள் மீது படையினர் கண்மூடித்தனமாக. குண்டுமாரி பொழிந்ததினால் 14 பொதுமக்கள் இறந்துவிட்டார்களென்று, வவுனியா அரச அதிபர் திரு. எம் பொன்னம்பலம் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (வி)

---

## லலித், காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. லலித் அத்துலத்முதலி கொழும்பு மாவட்டத்துக்காக மேல்மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும், திரு. காமினி திஸநாயக்கா கண்டி மாவட்டத்துக்காக மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா குருநாகல் மாவட்டத்துக்காக வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்காகவும் போட்டியிடவுள்ளனர். (இ)

---

## பின்போடப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பள உயர்வால் தோட்டத்துறை இப்போது பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. தேயிலையின் உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளன.

இதேவேளையில் இனப்பிரச்னைவிடயத்திலும் தேர்தலை முன்னிட்டு அரசாங்கம் அவசரமான முடிவையே மேற்கொண்டது.

இனப்பிரச்னைக்கு தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சுதந்திரமாக இயங்க முடியாது அதன் முடிவை அவசரமாக வெளியிட்டது.

அரசின் இந்த அவசர முடிவுகள் காரணமாக தற்போது அரசியல் பொருளாதாரீதியில் புதிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக அரசியல், பொருளாதார நிபுணர்கள் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

---

சித்தியெய்திய மாணவர்களைக் கொண்ட இல பாடசாலைகளின் விபரம் வருமாறு:-

கொக்குவில் இந்துக்கல்லூரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து பலா மாணவர்கள் 8 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர். (159)

---

## யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி திங்கட்கிழமை யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 55 க்கும் மேற்பட்ட வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 11-ம் திகதி திங்கட்கிழமை நடைபெற விருக்கும் ஆர்ப்பாட்டப்பேரணியில அனைத்து மக்களையும் கலந்து கொள்ளும்படி தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. சூ சிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வி)

---

## ஜனாதிபதியின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பலத்த காயம் அடைந்த இராணுவத்தினரை எனது கட்டிலுக்கருகிலேயே இசிச்சைக்காக அனுமதித்திருந்தனர்.

48 இராணுவத்தினரின் சடலங்களை ட்ரக்கில் கொண்டு வந்த படையினர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவை கண்டனம் செய்யும் வகையில் "பிரேமதாஸா பேச்சு வார்த்தை என்று கூறிவிட்டு வீட்டில் படுத்துறங்குகிறார், பலதடவைகள் விமானத்தில் வெளிநாடு சென்று வருகிறார். பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை நாங்கள் இங்கே செத்துமடிகின்றோம் என்று ஆத்திரத்துடன் கோஷமிட்டனர்.

திரு. முத்துராஜா கடந்த ஜூலை மாதம் பூநகரி இராணுவத்தினரிடம் சிக்கி பின்னர் அங்கிருந்து பலாலி முகாமுக்கு அனுப்பப்பட்டார். பலாலி முகாமில் அவர் சுமார் இரண்டரை மாதகாலம் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-160)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B